அசல்

3.5.42. A.K. ATHITHYAR.

அசல் -1

DR. A. K. ATHITHYAR,
PHYSICIAN AND OCCULTIST,
CHRISTIAN COLLEGE SCHOOL,
G. T., MADRAS.

Station Kayamoly.
Date 3-5-42

ஸ்ரீ சுந்தரமையர்
கலியாணசுந்தரமையர் } அவர்கட்கு

ஐயன்மீர், இறைவன் திருவுளப்படி உலகியல் இயங்குகின்றது. அதில் ஒன்றைக் கூட்டவும் குறைக்கவும் நம்மால் ஆகாது. எனினும் ஐயரவர்களுடன் கொண்ட பழக்கத்திற் கண்ட மென் மதுர வாக்கு, தமிழுக்கு அவர்கள் செய்த அருந்தொண்டு, அவர்கள் இன்னும் இருப்பின் தமிழன்னை புதுப் பணிகளால் பெறும் நலம் இவற்றை உன்னுங்கால் அவர்களின் மரணத்தைக் குறித்து மனம் கலங்குகின்றது. மறையும் மனிதனின் மனக் கவலை என் செய்யும்! சாந்தி வளர்க.

3109

வித்தகமார் செந்தமிழை விளம்பிநின்ற இருமுனிசொல்
வீழ்ந்த வேட்டைப்

புத்தகமாய் வடிவாக்கிப் புத்திளைஞர் படிக்கவைத்த
புண்யமூர்த்தி

உத்தமதா னபுரத்துச் சாமிநாதப்பெயரார்
உருவம் நீத்தும்

முத்தமிழ்க்கிவ் வுலகிருக்கும் காலமெல்லாம் பேர்காண்பார்
உலப்பிலாதார்.

P.T.O.

அசல்

3.5.42. A.K. ATHITHYAR.

அசல் -1

பத்துப்பாட் டென்னெட்டுத் தொகையலவும் காப்பியமும்
பாணிபிற
இத்தரையில் இறவாமல் புதுமுனியாய்ப் புத்துயிர்தாம்
ஈந்துகாத்தார்
சுத்தமன முடையோராய்த் தம்மாசான் முன்னோன்றற்
பெயர்கொண்டதனைப்
புத்திரர்க்கும் வாழ்மனைக்கும் சார்த்தித்தமிழ் செய்நன்றி
காட்டுகின்றார்.

(௨)

நாவலரும் இனிமைபொதி மொழியாளரும் மெய்ம்மையிலாச்
செய்கையாளரும்
மேலான வழிகள்பல காட்டிவைத்தார் வடுவோர்மேற்
கொண்டுவாழ.
ஆலால அர்த்தரெனப் பதமடைந்தார் அமைதியுறு
வாவென்றனும்
மேலாகக் கண்டபெரியார் பிறவை நினைவின்மனம்
கவல்கின்றனமே

வித்வான் காயாமொழி அ.கு. ஆதித்தர்
3-5-42